# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 56/2023

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாள் வியாழக்கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW1 Examined as PW1

| | | |
|---|---|---|
| Date | : | 21.12.2023 |
| Name | : | ஜான்சன்தேவராயர் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1 ,3 to A6 present. A7 absent. 317 petition filed and allowed.

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் நல்லத்தூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். 17.02.2018 தேதி கொங்கானகரை சுமார் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அன்று அறுப்பு அறுப்பதற்காக ஏஜெண்ட் ரவிச்சந்திரன் அறுவடை இயந்திரம் கேட்டேன். அவர்கள் இயந்திரம்அனுப்பி இருந்தார்கள்.அப்போது உபயோகத்தில் இருக்கும்போது 15 நிமிடம் ரிப்பேர் ஆகிவிட்டது. அறுவடை முடிந்த பிறகு 1-3/4 மணி நேரத்திற்கு என்னிடம் பில்லில் கையெழுத்து போடுமாறு கேட்டார்கள் அதற்கு நான் 1-1/2 மணி நேரம் தான் ஒடியது,. அதற்கு மட்டும்தான் நான் கையெழுத்து போடுவேன் என்று சொன்னேன். ஏஜெண்ட் குச்சிக்காரி மகனே தேவடியா மகனே என்று கொச்ச வார்த்தைகளால் திட்டினார். ஏஜெண்ட் ரவிச்சந்திரன், செந்தமிழ்வாணன்,

செந்ததமிழ்செல்வன்ஆகியோர் என்னிடம் சண்டை செய்தார்கள். வந்தவுடனே தகாத வார்த்தை கூறி என்னையும் என் தம்பியையும் பெல்டால் அடித்தார்கள். அதன் பிறகு ஏஜெண்ட ரவிச்சநதிரன் செந்தமிழ் செல்வன் செந்தமிழ்வாணன் ஆகிய இருவரும் கட்டை கழியால் அடித்தார்கள். கட்டையால் இடது தோள்பட்டையிலும், இடது முன்காலிலும் அடித்தார்கள். அதன பிறகு ரவிசந்திரன் என்பெயரை சொன்னால் ஊரே பயப்படும் அவருடைய அண்ணன் கண்ணன் என்பவர் வண்டியில் அழைத்து சென்று வேறு இடத்தில் அடைப்பதற்காக துக்கி சென்று விட்டார்கள் அப்போது நான் தப்பித்து ஒடிச்செல்லும்போது மீண்டு நாலுபேர் என்னை தூக்கி வண்டியில் ஏற்றினார்கள். திரும்பவும் எலி என்பவர் வீட்டிற்கு சென்று கதவை தாழ்பாள் போட்டுகொண்டடேன் அங்கேயும் கதவை திறந்துகொண்டு என்னை அடித்ததார்கள். கண்ணன் என்பவர் அண்ணங்கூடையில் தண்ணீரை என் மேல் உற்றினார்கள் நான் தினறிபோனேன். பின்னர் என்னை கால்வாய் கொட்டைகையில் வைத்து கொளுத்தவேண்டும் என்று சொன்னார்அதை கேட்டு எனக்கு பயம்ஏற்பட்டது. எங்கள் ஊர்காரர் பெத்தபெருமாள் என்பவர் என்னை அந்த இடத்தில் இருந்து காப்பாற்றினார். பெரம்பூர் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றார். அஙகிருந்து என்னை மமயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொணடு சென்றார்கள். என் நிலமை சரியில்லை என்று என்னை மறுபடியும் கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் சேர்த்தார்கள். 18.02.2018 அன்று போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம்காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான் கையில் அடிப்பட்டு கையெழுத்து போட முடியாமல் இருந்தேன். **அந்தபுகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பக்கப்படும் கட்டை எதிரி பயன்படுத்தியதுபோல்தான் இருக்கிறது. அதுதான்என்னை அடிக்க பயன்படுத்திய கட்டையா என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை இல்லை.</u>**